Arimaa Nokku Journal ISSN: 2320-4842
(UGC Care Group-I Journal) Vol-19 No. 01 January-March 2025

# பாட்டியல்கள் கூறும் பொருத்தத்தின் தோற்றம் - வளர்ச்சி

ஆய்வாளர்
**க. ராஜஸ்ரீ**
R17702 முனைவர் பட்ட ஆய்வாளர்
அ.வ.அ கல்லூரி (தன்னாட்சி)
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப்பெற்றது)
மன்னன்பந்தல், மயிலாடுதுறை – 609305

ஆய்வு நெறியாளர்
**முனைவர்.சு. தமிழ்வேலு**
தலைவர் &
இணைப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை,
அ.வ.அ கல்லூரி (தன்னாட்சி)
(பாரதிதாசன் பல்கலைக்கழக
இணைவுப்பெற்றது)
மன்னன்பந்தல், மயிலாடுதுறை -.

## முன்னுரை

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தோன்றிய இலக்கிய இலக்கணங்கள் அந்த அந்தக் காலத்திற்குரிய மக்களின் பண்பாட்டையும், சமூக அமைப்பையும் வெளிப்படுத்துவதாகவே அமைகின்றன. அந்த வகையில் பாட்டியல் நூல்களில் பெரிதாகப் பேசப்பட்டுள்ள பொருத்தங்கள் வர்ணக்கோட்பாட்டை வளர்த்தெடுப்பதாகவே அமைந்துள்ளன. ஆகவே பொருத்தத்தின் தோற்றம் தெளிவு பெற வேண்டும் என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

### பொருத்தத்தின் தோற்றம் வளர்ச்சி

ஒரு சமூக மக்களிடையே பின்பற்றப்படும் எந்த ஒரு மரபும் திடீரென்று தோற்றம் பெற்றவையாக இருக்க முடியாது, படிப்படியாகவே வளர்ச்சி பெற்று நிலைபெற்றிருக்க வேண்டும். ஒரு காலக்கட்டத்தில் மக்களிடையே காணப்பட்ட வர்ண முறையின் ஆதிக்கப்போக்கைப் பாட்டியலின் பதிவு கொண்டு அறிய முடிகின்றது. அந்த வகையில் பாட்டியலில் பேசப்பட்டுள்ள பொருத்தத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி அறிய வேண்டியது அவசியமாகும்.

### தொல்காப்பியத்தில் பொருத்தம்

பாட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ள பொருத்தம் பற்றிய சிந்தனை எவ்வாறு தோற்றம் பெற்றது என்பதை அறிய வேண்டுமாயின் அதனை தமிழுக்கு மூலமாகவும் முதலாகவும் அமைந்துள்ள தொல்காப்பியத்தில் இருந்தே இது தொடர்பான செய்திகளை ஆராய்வது பொருத்தமாக அமையும்.

தொல்காப்பியத்தில் தலைவன் தலைவிக்கு உளதாகும் ஒப்பு பாகுபாடு பொருத்தம் என்ற பொருளில் அமைந்துள்ளமையைப்,

> **“பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோ**
> **டுறவு நிறுத்தகாம வாயில்**
> **நிறையே யருளே உணர்வொடு திருவென**
> **முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே”1**

என்ற இந்நூற்பாவின் மூலம் அறிய முடிகின்றது.

தொல்காப்பியம் கூறிய பொருத்தம் பாட்டியல் கூறம் பொருத்தம் இரண்டிற்கும் இடையே வேறுபாடு காணப்படுகின்றன. ஆகையால் தொல்காப்பியத்தில் இருந்து

பாட்டியல் இக்கருத்தைப் பெற்றிருக்க வாய்ப்பில்லை. பாட்டியல் கூறும் பொருத்தத்திற்கு வித்தாக அமைந்த கருத்தியல் எவை என்பது ஆராயப்பட வேண்டும்.

பாட்டியலுக்கு முன் எழுந்த சில நூல்களில் பொருத்தச் சிந்தனை காணப்படுவதைப் பின்வரும் நூல்கள் மூலம் அறியலாம்.

### வாய்ப்பியம் - இசை நூல்

வாய்ப்பியம் என்பது ஒரு இசை இலக்கண நூலாகும். இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் இந்நூலில் இருந்து சில நூற்பாக்களை மேற்கோள் காட்டியுள்ளார்.

**"வெண்பா முதலா நால்வகைப்பாவும்**
**எஞ்சா நாற்பால் வருணக்குரிய"**[2]

**" பாவினத்து இயற்கையும் அதனோரற்றே**
**மன்னவன் என்று ஆசிரியம்மே"**[3]

என்ற நூற்பாக்கள் வெண்பா அந்தணர்க்கும், ஆசிரியம் மன்னர்க்கும், கலிப்பா வணிகர்க்கும், வஞ்சிப்பா சூத்திரர்க்கும் உரியது என்று வகுக்கின்றது. பாக்களை வருணத்தோடு தொடர்புபடுத்;திப் பார்க்கும் முறை இந்நூலில் அமைந்துள்ளதை அறிய முடிகின்றது. "இசை இலக்கண நூல்களுக்குப் பாக்களை வருணத்தோடு தொடர்புபடுத்தி பார்க்கும் தன்மை உடையது"[4] என்ற இரா. சீனிவாசன் கருத்து ஏற்புடையதாக அமைந்துள்ளது.

வாய்ப்பியம் நூலில் பாக்களை வருணத்தோடு தொடர்புபடுத்திய முறை பின் எழுந்த பாட்டியல் நூல்களில் பாக்களுக்கு நிலமும், நிறமும். நாளும், இராசியும், தேவதையாதியும் வரையறை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### செயிற்றியம் - நாடக இலக்கண நூல்

செயிற்றியம் என்ற நாடக இலக்கண நூல் அறம், பொருள், இன்பம் முதலிய நூலில் அமையும் உறுதிப்பொருள்களையும் கூட நால் வருணத்தோடு சார்த்திக் கூறுகின்றது.

**"அறம் பொருள் இன்பம் அரசர் சாதி**
**அறம் பொருள் வணிகர் சாதியென் றறைப**
**அறமேற் சாத்திரர் அங்கமாகும்"**[5]

என்ற பகுதியில் இக்கருத்தைக் காணலாம். இப்படி பாக்களில் மட்டுமின்றி பொருளிலும் வருணங்களைச் சார்த்தி உரைக்கும் நெறி நாடக நூலில் காணப்படுகின்றது. இம்முறையைப் பின் எழுந்த பாட்டியல் நூல்களில் காணலாம்.
பாட்டியலில் எழுத்துக்களுக்கு வர்ணம் கூறப்பட்டுள்ளது இதனுடன் தொடர்புடையதாக அமைகின்றது.

### இந்திரகாளியம்

பாட்டியல்களில் காணப்படும் பொருத்தச் செய்திகளே அன்றி இது போன்ற பிற இடங்களிலும் வருணம் சார்த்தி உரைக்கும் நெறி இந்திரகாளியம் நூலில் உள்ளது

என்பதைப் பின்வரும் ஓலையின் இலக்கணம் பற்றிய இதன் சூத்திரத்தால் அறியலாம்.

**“ஓலைய திலக்கணம் உரைக்கும் காலை**
**நாலாறு விரற்றானம் நான்மறையோர்க்குப்**
**பார்த்திபர் தமக்குப் பதிற்றி ரட்டிவிரலே**
**வணிகர்க் கெண்ணிரு விரலே**
**சூத்திரர்க் கீராறு விரலே**
**இப்பரி சேபாட் டெழுதவும் படுமே”6**

என்ற நூற்பாவில் அந்தணர்க்கு 24 விரல் நீளமும், அரசர்க்கு 20 விரல் நீளமும், வணிகர்க்கு 16 விரல் நீளமும், சூத்திரர்க்கு 12 விரல் நீளமும் உள்ள ஓலையைப் பயன்படுத்திப் பாட்டெழுத வேண்டும் என்று குறிப்பிடுகின்றது. மேலும் இந்நூலில் தானம் மற்றும் நாள் பொருத்தம் பற்றிய கருத்துகளும் இடம் பெற்றுள்ளன.

**“மூப்பும் மரணமும் மொழிந்த காலை**
**நிலையிற் குலைதல் செல்வம் நீங்கல்**
**கொலையிற் பிணியிற் கூட்டுதல் ஆகும்”7**

என்ற நூற்பாவில் மூப்பு, மரணம் ஆகிய தானங்கள் செய்யும் தீமையைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

**“எண்வகைக் குறியியலுமச் சீர்களுள்**
**வருணற் குரிய நாளே சதையம்**
**இயமானற் குரிய நாளே பரணி**
**சந்திரன் தேவிநாள் கேட்டை யாகும்…”8**

என்ற சூத்திரத்தில் எட்டு கணங்களுக்கு உரிய நாள்கள் கூறப்பட்டுள்ளன. இந்திரகாளியத்தில் அமைந்த பொருத்தச் செய்திகளுக்கும் பாட்டியலில் அமைந்துள்ள பொருத்தச் செய்திகளுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதை உணர முடிகின்றது. மேலும் “ இந்திரகாளியம் என்னும் இசை இலக்கணநூலும் இது போன்ற கருத்தைக் கூறியுள்ளதாக இரா. சீனிவாசன் குறிப்பிட்டுள்ளார்”.9

மேற்கண்ட நூல்கள் இளம்பூரணர் உரை மற்றும் யாப்பருங்கலவிருத்தியுரை முதலிய உரைகளில் காணப்படும் சில மேற்கோள் நூற்பாக்கள் கொண்டு அறியப்படுகின்றன. ஆகையால் அவற்றில் பொருத்தம் பற்றிய செய்திகள் சொல்லப்படும் இடம், காரணம் முதலியவற்றை அறிய முடியவில்லை. மேலும் அவற்றில் எத்தனைப் பொருத்தங்கள் கூறப்பட்டுள்ளன என்பதையும் அறிய வழி இல்லை. ஆனால் கிடைக்கம் ஒரு சில நூற்பாக்களைக் கொண்டு இசை, நாடக, இலக்கண நூல்களில் பொருத்தம் தொடர்பான கருத்துகள் இருந்தன என்று உறுதியாகக் கூறலாம். இந்நூல்களைப் போன்றே சிற்பநூல்களிலும் பொருத்தச் செய்திகள் பேசப்படுகின்றன என்பதைப் பின்வரும் குறிப்பால் அறியலாம்.

## சிற்ப நூல்கள்

சிற்ப நூல்களில் பொருத்தம் பற்றிய செய்திகள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. சிற்பம் செய்யப் பயன்படும் கல், மரம் முதலியவற்றின் தேர்வு கோயில், யாகசாலை நிறுவப்படும் இடம், சிலை, கோயில் ஆகியவற்றிற்கும், அவற்றைச்

செய்விப்போனுக்கும் இருக்க வேண்டிய பொருத்தங்கள் ஆகிய இடங்களில் சிற்ப நூல்களில் பொருத்தம் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன. பொதுவாகச் சிற்பத் தொழிலில் சகுணம் பார்த்தல், நம்பிக்கை அடிப்படையிலான சடங்குகள் ஆகியன முக்கிய இடத்தைப் பெறுகின்றன. சிற்பம் செய்வதற்கு ஏற்ற கற்களைத் தேர்வு செய்யும் போது அந்தக் கற்களை பின்வருமாறு வகைப்பாடு செய்கின்றனர். "சிலையானது வெளுப்பு, சிவப்பு, மஞ்சள், கருப்பு என நான்கு வகைகளாகும். வெளுப்பு, சிவப்பு, மஞ்சள், கருப்பு இந்நிறங்கள் முறையே பிராமணாதி ஜாதிகளுக்கு உரியவைகளாகக் கூறப்பட்டுள்ளன. அந்தந்த ஜாதிகளுக்குரிய சிலைகள் அந்தந்த ஜாதிக்கு ஸ்ரேஷ்டமாகும். ஹீநஜாதிச் சிலைகள் நிஷித்தமன்று. ஆனால் ஹீநஜாதியினருக்கு உத்தம ஜாதிச் சிலைகள் கூடாதவைகளாம்"10 என்று குறிப்பிடுகின்றது.

பாட்டியல் நூல்களில் பாக்களை நான்கு வருணமாகப் பிரிப்பது போலவே இந்தப் பிரிவு காணப்படுகிறது. பாட்டியல் நூல்களில் பாக்களை இப்படி நான்கு வருணமாகப் பிரிப்பதற்கு எந்த அடிப்படையோ காரணமோ சொல்லப்படவில்லை. ஆனால் சிற்ப நூல்களில் கற்களை நான்கு வருணமாக பிரிப்பதற்குக் காரணம் வண்ணம் என்று சொல்லப்பட்டுள்ளது.

சிற்பம் செய்ய பயன்படும் மரங்களைத் தேர்ந்தெடுக்கும் போது பின்பற்றப்படும் பாகுபாடு முறைகள் பின்வருவனவாகும். "அழுத்தமும் பசையும் உள்ள பூமியிலுண்டானது வளைவில்லாமல் நேராக இருப்பது, அழுத்தமாக இருப்பது, கனமாக இருப்பது, ஸ்வல்பமான வாஸனையுடனிருப்பது, பழம் புஷ்பம் இவைகள் அழுத்தமாகவும் கனமாகவும் இருப்பது, குளுமையும் உஷ்ணமும் கலந்திருப்பது.."[11] என்று விளக்கும் இப்பகுதியில் ஆண்மரம், பெண்மரம், அலிமரம் என மரங்கள் அவற்றின் கணம், இலை, பூ, பழம், சாறு ஆகியவற்றின் அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன. பாட்டியல் நூல்களிலும் எழுத்துக்கள் ஆண், பெண், அலி என மூன்று வகையாகப் பிரிக்கபட்டுள்ளன.

சிற்பம் செய்யப்பயன்படும் கற்கள் அகவை அடிப்படையில் பின்வருமாறு பிரிக்கப்படுகின்றன. "சிலையானது ஒலி, உருவம் இவைகளின் பேதங்களால் பாலை, யுவதி, விருத்தை என்றும் புருஷசிலை, ஸ்திரீசிலை, நபும்ஸக சிலை என்றும் பாகுபாடு செய்யப்பட்டிருக்கும். செய்யும் பொழுது. சத்தமும் குட்டையான உருவமும் உடைய சிலையானது பால சிலையாகும் என்று கூறப்பட்டிருக்கின்றது. மணியின் ஓசையைப் போன்ற ஓசையும் நீண்ட வடிவமும் உடையது ஸ்திரீ சிலை. எரசலான சத்தமுடையது விருத்தசிலை என்று கூறப்பட்டிருக்கின்றது."12 ஒலி அடிப்படையில் கற்கள் இனங்காணப்பட்டாலும் அவற்றை அகவை அடிப்படையில் பாலை (சிறுமி), யுவதி(இளம்பெண்), விருத்தை (மூதாட்டி) என்று பிரிக்கின்றனர். பாட்டியல் நூல்களில் வரும் தானம் என்ற பொருத்தமும் இதே அடிப்படையில் அமைக்கப்பட்டிருப்பது நோக்கத்தக்கது ஆகும்.

சிற்பம் செய்விப்போனுக்கும் செய்யும் சிற்பத்தின் அளவுக்கும் இருக்க வேண்டிய பொருத்தங்களாகப் பின்வருபவை அமைகின்றன. "லிங்கத்தின் உயர அங்குலத்தை 8 ஆல் பெருக்கி 27 ஆல் வகுத்து மீதம் வரும் எண்ணானது அசுவதி முதலிய நஷத்திரங்களாகும். அரசன், யஜமானன் இவர்களது ஜன்ம நஷத்திரம் முதல் லிங்கத்தின் நஷத்திரம் வரையில் எண்ண வேண்டும். அவ்விதம் தேவாலய

நஷத்திரம் வரையில் எண்ண வேண்டும். இவ்விதம் எண்ணி வரும் நஷத்திரமானது அப்பலனைக் கொடுக்கக் கூடிய சுப நஷத்திரமாக இருக்க வேண்டும். ஜன்ம நஷத்திரத்திற்கு 2 வது நஷத்திரம், 4 வது நஷத்திரம், 8 வது நஷத்திரம், 6 வது நஷத்திரம், 9 வது நஷத்திரம் இவைகள் சுப பலனைக் கொடுக்கக் கூடியவைகள் என்று கூறப்பட்டிருக்கின்றன. மற்ற நஷத்திரங்கள் அசுப பலனைக் கொடுக்கக் கூடியவைகளாகும்"[13] என்ற பகுதியில் நாள்களைக் கணக்கிடும் முறையும், ஏற்கும், ஏற்காத நாள்கள் இவை என்றும் கூறப்பட்டுள்ளன. இம்முறை செய்விப்போனுக்கும் செய்யும் சிற்பத்திற்கும் இருக்க வேண்டிய பொருத்தங்களாகக் கூறப்பட்டுள்ளன. இவையே பாட்டியல் நூலில் நாள் பொருத்தத்திலும் அமைந்துள்ளன. பாட்டியலில் பாட்டுடைத்தலைவனுக்கும் செய்யுளின் முதல் சீருக்கும் நாள் பொருத்தம் குறிப்பிடப்படுகின்றன.

வருணம், பால், தானம், நாள் ஆகிய நான்கு பொருத்தங்கள் சிற்ப நூல்களில் அமைந்துள்ளமை மேலே காட்டப்பட்டுள்ளது. கருங்கல்லினாலும் பஞ்சலோகத்தினாலும் சிற்ப உருவங்கள் உண்டாக்கப்பட்டது கி.பி. 7 ஆம் நூற்றாண்டிலே ஆகும். பாட்டியல் நூல்களின் தோற்றம் கி.பி. 8-9 ஆம் நூற்றாண்டு எனப்படுகின்றது. சிற்ப நூல்களில் பேசப்பட்ட பொருத்தம் பின் எழுந்த பாட்டியல் நூல்களில் வளர்ச்சி அடைந்து இருக்கலாம். இதனால் இலக்கிய உலகில் காணப்படும் பொருத்தம் தொடர்பான சிந்தனைகள் சிற்ப நூல்களில் இருந்து வந்திருப்பதற்கான வாய்ப்புகள் மிகுதி என்று கூற இயலும்.

இங்கு மற்றொன்றையும் குறிப்பிடுதல் வேண்டும். பாட்டியல் நூல்களில் காணப்படும் பொருத்தங்கள் பாட்டுடைத் தலைவனுக்கும் பிரபந்தங்களுக்கும் குறிப்பாக முதல் சீருக்கும் இருக்க வேண்டிய பொருத்தங்களையே பெரிதும் குறிப்பிடுகின்றன. பாட்டுடைத்தலைவனை முன் வைத்துப் பாடப்பெறும் பிரபந்தங்கள் (சங்க இலக்கியம் தவிர்த்து) கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் தோன்றுகின்றன. பாண்டிக்கோவை, நந்திக்கலம்பகம் முதலியவற்றை குறிப்பிடலாம். இன்று முழுமையாக கிடைக்காத முத்தொள்ளாயிரம் முதலியவற்றையும் இவ்வகையினதாகக் கொள்ளலாம். இந்த நூல்கள் பரிசில் பெறுவதற்காகப் பாட்டுடைத் தலைவனைப் புகழ்பவை ஆகும். ஆகவே இங்கு பாட்டுடைத் தலைவன் முக்கிய இடம் பெறுகின்றான். இதைப்போன்று சிற்ப நூல்களிலும் செய்விப்போன் முக்கிய இடம் பெறுகின்றான்.

## முடிவுரை

மேற்கண்ட இசை. நாடக, சிற்ப நூல்களில் சிறிது சிறிது தோற்றம் பெற்ற பொருத்தச் செய்திகளே பின் எழுந்த பாட்டியல்களில் முழு வளர்ச்சியை அடைந்தன என இதன் மூலம் அறிய முடிகின்றது.

## சான்றெண் விளக்கம்

1. தொல்காப்பியம், பொருள். - நூ. 269
2. யாப்பருங்கல விருத்தியுரை, மேற்கோள் - நூ. 95
3. மேலது. - நூ. 95
4. இரா. சீனிவாசன், தமிழ் இலக்கண மரபுகள் - ப. 232
5. மேலது. - ப. 233
6. இந்திர காளியம், - நூ. 44

7. மேலது. - நூ. 41
8. மேலது. - நூ. 43
9. இரா. சீனிவாசன், தமிழ் இலக்கண மரபுகள் - ப. 232
10. மேலது. - ப. 237
11. மேலது. - ப. 238
12. மேலது. - ப. 238
13. மேலது. - ப. 239

## துணை நூற்பட்டியல்

1. இரா. இளங்குமரன் - யாப்பருங்கலம் விருத்தியுரை
திருநெல்வேலி, தென்னிந்திய சைவ
நூற்பதிப்பு கழகம்,
பிரகாசம் சாலை, சென்னை, மு.ப. 1973
2. இரா. சீனிவாசன் - தமிழ் இலக்கண மரபுகள்
பார்கர்
இராயப்பேட்டை, சென்னை.
நவம்பர் 2000.
3. இளம்பூரணர் உரை - தொல்காப்பியம் - பொருள்
சாரதா பதிப்பகம்
திருவல்லிக்கேணி,
சென்னை.
ஆறாம் பதிப்பு - ஜீன் 2008.